**இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் - 2015**

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 09 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 58,232,898 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் அதிகாரத்தைச் செயற்படுத்தும் போதும், கடமைகளை நிறைவேற்றும் போதும் நோக்கத்தை செயற்படுத்தும் போதும் நிறுவகத்தினால் செலவிடப்படுகின்ற செலவினங்களைத் தீர்ப்பதற்கு தேவையான மொத்தப் பணத்தை நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டிய போதிலும், மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக நிறுவகத்தினால் நன்கொடை நிதியம் (Endowment Fund) என்ற பெயரில் புறம்பான நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இந்நிதியத்தின் கணக்குகளைத் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு 2012 யூலை 26 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்நிதியத்தின் நடவடிக்கைகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்குப் பதிலாக தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கலொன்றாக கணக்குக் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

02 செயற்திட்டங்களுக்குரிய கடன்கொடுத்தோரிடமிருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பெற வேண்டிய ரூபா 1,873,227 தொகையும் இளைஞர் விவகார அமைச்சிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,147,747 தொகையும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிறுவகத்தினால் சரியாகவும் நாளதுவரையாகவும் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.3 ஆம் பந்தி | ரூபா 410,630 கிரயத்திலான நூலகத்தின் புத்தகங்கள் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டு மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,119,500 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 744,965 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 374,535 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாடல்லாத செலவினம் ரூபா 489,067 ஆல் குறைவடைந்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக இருந்தது

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 863,938 ஆல் குறைவடைந்து மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 119,500 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டி ரூபா 63,237,093 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 88,258,767 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 24 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 56,500,000 வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 40 செயற்திட்டங்களை செயற்படுத்தி ரூபா 36,068,000 வருமானமொன்று மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 03 செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக முற்பணமாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,000,203 தொகை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய 11 செயற்திட்டங்களின் முடிவுறுத்தல் காலம் 04 மாதங்களுக்கும் முதல் 01 வருடத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

(இ) 2014 ஒக்தோபர் 01 முதல் 2019 மார்ச் 01 வரையான காலப்பகுதியில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து 950,000 கனேடிய டொலர்கள் நிதி பங்களிப்பொன்று வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பினவரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்துடனான உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது தொழில்நுட்ப செயன்முன்னேற்ற அறிக்கையுடன் நிறுவகத்தின் பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட வருமானம் ரூபா 27,750,000 ஆக இருந்ததுடன், உள்ளவாறான வருமானம் ரூபா 23,902,995 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உள்ளவாறான வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விட 14 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பின் பிரகாரம் 04 செயற்திட்டங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 விளைவற்ற சொத்துக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அச்சிடல் மற்றும் வெளியீட்டு பிரிவில் ரூபா 1,114,813 பெறுமதியான 2098 புத்தகங்கள் 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

நிறுவகத்தினை நடாத்திச் செல்லும் கட்டிடம் 2011 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த காணியை நிறுவகத்தின் பெயரில் கையேற்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை நிறைவேற்றுவதற்காக 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலப்பகுதிக்காக கூட்டிணைந்த

திட்டமொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தின் செயற்திட்டங்களுக்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் உள்ளவாறான செயலாற்றலை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் இலக்குகள் அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டம் காலரீதியில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பெறுகைகள் திட்டம்

அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.